பக்கங்கள்:-23


காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 09 | புதன்கிழமை | 26.11.2025 | அதிர்வு 118

# வடக்கு, கிழக்கில் வெள்ளப் பேரிடர்!

**அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்**

இலங்கைக்கு மிகவும் அண்மித்து உருவாக்கும் காற்றழுத்தம் மற்றும் காற்றுச் சுழற்சிகள் 06



# மேதகுவின் 71 ஆவது பிறந்த நாள் இன்று!

தமிழர்களின் விடுதலைக்காக இறுதி வரைப் போராடிய தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் 71 ஆவது பிறந்த நாள் இன்றாகும்.

தமிழர்களைத் தலைநிமிரச் செய்த தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் நடைபெறவுள்ளன.

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் பூர்வீக இல்லத்துக்கு முன்பாகவும் பிறந்த நாள் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.



## மக்கள் இப்போது யார் பக்கம்?

# ‘தில்’ இருந்தால் தேர்தலை உடன் நடத்திக் காட்டுங்கள்

## அரசுக்கு மொட்டுக் கட்சி சவால்



**துணிவு இருந்தால் மக்கள் இப்போது யார் பக்கம் என்பதை அறிய மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்டுங்கள் என்று தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் சவால் விடுத்துள்ளார்.**

**என்.பி.பி. அரசுக்கான மக்கள் ஆதரவு சரிந்துவிட்டது என்பதை நுகேகொடைக் கூட்டம் வெளிப்படுத்தியது என்று சுட்டிக் காட்டியே அவர் இந்தச் சவாலை விடுத்துள்ளார்.** 06




இலங்கையில் உயர் பதவிகளுக்கு உரியவர்களை நியமிப்பதில் முக்கிய பங்கு அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு உள்ளது.

பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், கணக்காய்வாளர் தலைமையதிபதி போன்ற பல்வேறு உயர் பதவிகளுக்கான நியமனங்கள் அரசமைப்பு கவுன்ஸிலினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதே போல தேர்தல் ஆணையம் உட்பட பல சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உரியவர்களை நியமிப்பதிலும் அரசமைப்பு கவுன்ஸிலுக்கு அங்கீகரிக்கும் அதிகாரம் உண்டு.

இன்றைய நிலையில் இந்தக் கவுன்ஸிலில் தமிழரசு எம்.பியான சிறீதரன் இடம்பெற்றிருக்கின்றார். அவரது அங்கத்துவமும் ஆதரவும் கவுன்ஸிலில் தனக்குப் பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டு, தனக்கு சாதகமாகக் கையாள்வதற்கு அரசுத் தரப்புக்கு இன்று தவிர்க்க முடியாததாக அதிகம் தேவைப்படுகின்றது. 06




# அநுர அரசுக்கு எதிராக இருமுனைத் தாக்குதல்!

## எதிரணிகள் வியூகம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிரான போராட்டத்தை தனித்தும், கூட்டாகவும் முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்பன உள்ளிட்ட எதிரணியிலுள்ள சில கட்சிகள் இணைந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையில் நுகேகொடையில் கடந்த 21 ஆம் திகதி கூட்டத்தை நடத்தி இருந்தன.

இந்தக் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திப பங்கேற்கவில்லை. எனினும், எதிர்வரும் ஜனவரி மாதமளவில் அரசுக்கு எதிராகப் பாரிய போராட்டமொன்றை நடத்துவதற்கு அந்தக் கட்சி திட்டமிட்டுள்ளது என அறியமுடிகின்றது.

அதேவேளை, நாடு முழுவதும் ஆயிரம் கூட்டங்களை நடத்துவதற்கு உத்தேசித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக டிசம்பரில் இரு கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றது.


இதற்கு முன்னதாக எதிர்வரும் 8 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் விசேட நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது.

அதேபோல் எதிரணியிலுள்ள ஏனைய சில கட்சிகளும் சில கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளன. முக்கிய தருணங்களில் இணைந்து கூட்டங்களை நடத்துவதற்கும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

இதற்கிடையில் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் கூட்டமொன்றை நடத்த வேண்டும் என்ற யோசனை ஆளுங்கட்சியிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

# தமிழர் வரலாற்றை உள்ளடக்கிய பாடத்தைப் பாடமாக்க வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. வலியுறுத்தல்



தமிழர்களின் வரலாற்றை உள்ளடக்கிய வரலாற்றுப் பாடத்தைக் கட்டாயப் பாடமாக கற்பிப்பதன் ஊடாகவே எதிர்காலத்தில் அனைத்து இன மக்களும் சமமான அந்தஸ்துடன் வாழ்வதற்குத் தயாராவார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் கல்வி மறுசீரமைப்புக்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் பி. சத்தியலிங்கம் குறிப்பிட்டார்.

வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தரும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் கேட்டுக்கொண்டார்.

## கடந்த 130 ஆண்டுகளில் இல்லாத வகையில்

# இலங்கைக்கு நெருக்கமாக மிக ஆபத்தான தாழமுக்கம்

## அதீத மழை தொடரும் என எச்சரிக்கை



"இலங்கைக்கு தென் மேற்கிலும் தென்கிழக்கிலும் காணப்படும் காற்றுச் சுழற்சிகள் முறையே கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி நகர்ந்து ஒன்றாக இணைந்து தாழமுக்கமாக மாறவுள்ளன. இவ்வாறு இரு காற்றுச் சுழற்சிகள் இணைந்து இலங்கை ஊடாக நகர்கின்றமை 130 ஆண்டுகளில் இதுவே முதல் தடவை. இதனால், எதிர்வரும் 30ஆம் திகதிவரை வடக்கு மாகாணத்தில் கன மழை தொடரும்."

- இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராசா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையின் தென் மேற்கிலும் தென்கிழக்கிலும் காணப்படும் காற்றுச் சுழற்சிகள் முறையே கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி நகர்ந்து இன்று புதன் கிழமை ஒன்றாக இணைந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக வலுப்பெறவுள்ளன.

இந்தக் காற்றழுத்தத் தாழ்வுநிலை ஆரம்பத்தில் இலங்கையின் நிலப் பகுதி ஊடாகவும், பின்னர் இலங்கையின் கிழக்குக் கரைப்பகுதி ஊடாகவும் நகரவுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதியளவிலேயே அந்தக் காற்றழுத்தத் தாழ்வுநிலை வடக்கு மாகாணத்தில் இருந்து நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

அதேவேளை இன்று முதல் எதிர்வரும் 29ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் அத்துடன் மேற்கு, தெற்கு, மத்திய, சபரகமுவா, ஊவா, வட மத்திய மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிகக் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்துடன் கிழக்கு தெற்கு, மேற்கு, மத்திய, சபரகமுவா மற்றும் ஊவா மாகாணங்களில் காற்று மணிக்கு 50 கிலோமீற்றர் தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது." – என்றார்.

# உயர்தரப் பரீட்சை வினாத்தாள் வினாக்களை தனியார் கல்வி நிறுவனம் விநியோகித்தது

## சாமர சம்பத் சுட்டிக்காட்டு

"கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பொருளியல் விஞ்ஞான வினாத்தாளின் பகுதி ஒன்றில் 50 கேள்விகளில் 27 வினாக்களும் பகுதி இரண்டில் 10 வினாக்களில் 5 வினாக்கள், நுகேகொடை தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் மேலதிக வகுப்பில் விநியோகிக்கப்பட்ட வினா பத்திரத்தில் இருந்துள்ளது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"இடம்பெற்று முடிந்த உயர்தர பரீட்சையின் பொருளியல் விஞ்ஞான வினா பத்திரம் இன்று நாட்டில் பேசுபொருளாக அமைந்துள்ளது. நுகேகொடை சாக்கியா தனியார் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு வினா பத்திரத்திரம் ஒன்றை கையளித்திருக்கிறது. உயர் தர பரீட்சையில் பரீட்சைகள் திணைக்களம் பரீட்சைக்கு எடுத்திருந்த, பகுதி 1, வினா பத்திரத்தில் 50 கேள்விகள் இருக்கின்றன. அதில் 27 கேள்விகள் குறித்த தனியார் கல்வி நிறுவனம் மாணவர்களுக்கு வழங்கியிருந்த வினா பத்திரத்தில் இருந்த வினாக்களுக்கு சமமானதாகும்.

அதேபோன்று பகுதி2ல், 10 வினாக்களில் 5வினாக்கள் குறித்த தனியார் கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த வினாத்தாளில் இருந்த வினாக்களுக்கு மிகவும் சமமாகவே இருக்கிறது. பகுதி 2இல் 5வினாக்களுக்கே விடை எழுத்த வேண்டி இருக்கிறது. சில வேளை குறித்த 5 வினாக்களும்



தனியார் கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வினாக்களாக இருந்தால், அது பரீட்சையின் பெறுபேற்றில் பாரிய வித்தியாசத்தை ஏற்படுத்துவதுடன் ஏனைய மாணவர்களுக்கும் அநீதி ஏற்படுகிறது.

அதனால் பரீட்சை திணைக்களத்தின் பொருளியல் விஞ்ஞான வினாத்தாளையும் நுகேகொடை சாக்கியா கல்வி நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்டிருக்கும் வினாத் தாள்களையும் நான் சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்த இரண்டு வினாத்தாள்களையும் ஒப்பிட்டுப்பார்த்து, இது சரியா, பிழையா என தேடிப்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் மாணவர்களுக்கு அநீதி ஏற்படும். அதற்கு இடமளிக்கக்கூடாது." –என்றார்.

# எம்மைக் குறைகூறுவதை விடுத்து மக்களுக்குச் சேவையாற்றுங்கள்

## ஆளுந்தரப்புப் பிரதிநிதிகளுக்கு மனோ பதிலடி



மலையகத்தில் இருக்கும் ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மைக் குறை கூறிக்கொண்டிருக்காமல், நாங்கள் எமது காலத்தில் மலையகத்தில் மேற்கொண்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

“மலையக மக்களின் வீடுகள் தொடர்பான விடயங்களை வேறு ஒரு அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு இல்லாமல் வீடமைப்பு தொடர்பில் தேசிய கொள்கை ஒன்றை அமைத்து, அதனை ஒரு அமைச்சுக்கு கீழ் கொண்டுவந்து, நாட்டின் அனைத்து பகுதிகளுக்குமான வீடமைப்பு நடவடிக்கைகளை ஒரு அமைச்சுக்கு கீழ் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது அரசில் மலையக மக்களின் வீடமைப்புப் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்தி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நாங்கள் கலந்துரையாடி, 14ஆயிரம் வீடுகளை அமைக்கத் தேவையான உதவிகளைப் பெற்றுத் தருவதான உத்தரவாதத்தைப் பெற்றுக் கொண்டோம். ஒரு வீட்டுக்கு 28 இலட்சம் ரூபா வழங்குவதாகத் தெரிவித்திருக்கின்றது. அதனால் இந்தப் பணத்தை பெற்றுக்கொண்டு, பொறுப்புடன் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

அத்துடன் வீட்டுத்திட்டங்களை மேற்கொள்ளும்போது பிரதான வீதிக்கு அருக்கில் அமைப்பதை கொள்கையாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவிசாவளை புவக்பிட்டி பென்டிக் தோட்டத்துக்கு மேலால் கருங்காலி என்ற ஒரு பிரிவு காணப்படுகின்றது. அண்மையில் அங்கு ஏற்பட்ட தீ அனர்த்தம் ஏற்பட்டபோது நான் அங்கு சென்றேன்.

வெள்ளவத்தையில் இருந்து எனது ப்ராடோ வாகனத்தில் பென்டிக் தோட்டத்துக்கு ஒரு மணித்தியாலயத்துக்கும் குறைவான நேரத்தில் சென்றேன். ஆனால், பென்டிக் தோட்டத்தில் இருந்து குறித்த இடத்துக்கு செல்ல எனக்கு இரண்டு மணி நேரம் சென்றது.

அதாவது, அந்த மக்கள் அங்கு தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் தபால் காரர் யாரும் அந்த பிரதேசத்துக்குச் செல்வதில்லை, அவர்களுக்குச் செல்ல முடியாது. அதனால் அந்த மக்களை கீழ்ப் பகுதிக்குக் கொண்டு வந்து, பிரதான வீதிக்கருகில் வீடுகள் நிர்மாணித்து கொடுக்க வேண்டும். மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பது மாத்திரமல்ல, அந்த மக்களை தேசிய நீராட்டத்துக்குள் கொண்டுவர வேண்டும்.

மலையக மக்களுக்கு இரண்டு இலட்சம் வீடுகள் தேவைப்படுகின்றன. அந்த மக்கள் இந்த நாட்டுக்காக 200 வருடங்கள் உழைத்தவர்கள். அதனால் அந்த மக்களுக்கு தேவையான வீட்டு வசதிகளை செய்துகொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும். மாறாக அந்த மக்களுக்கு அனுபாதப்பட்டு செய்த் தேவையில்லை.

கடந்த மார்ச் மாதம் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அமைச்சின் மாவட்ட குழு கூட்டம் இடம்பெற்றபோது, அமைச்சர் சமந்த வித்தியாரத்னவிடம், எத்தனை வீடுகளை கட்டப்போகிறீர்கள் என கேட்டபோது, ரணில் விக்ரமசிங்க அமைத்த 1300 வீடுகள் கட்டி முடியாமல் இருக்கிறது. மொத்தமாக 6ஆயிரம் வீடுகளை டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் கட்டி முடிப்பதாகத் தெரிவித்தார்.

ஆனால் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் 6 ஆயிரம் வீடுகளைக் கட்டி முடிக்க முடியாது. ஆனால், இதனை வைத்து, நாங்கள் அரசியல் செய்ய முயற்சிக்கவில்லை. அமைச்சர் முயற்சித்திருப்பார். என்றாலும் அது சாத்தியமாக வில்லை. என்றாலும் மக்களுக்கு அளித்த வாக்குறுதி மீறப்பட்டிருக்கின்றது. அதனால் அரசில் இருக்கும் மலையகப் பிரதிநிதிகள் எங்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல், மலையக மக்களுக்கு நாங்கள் எமது காலத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருக்கின்றோம், அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.” – என்றார்.

# அச்சுறுத்தி எம்மை அடக்கவே முடியாது!

## இப்படி மொட்டுக் கட்சி வீராவேசம்




அச்சுறுத்தல்கள் மூலம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் பயணத்தைத் தடுக்க முடியாது என்று அக்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளைத் தேசிய மக்கள் சக்தி அரசு நிறைவேற்றவில்லை என்பதாலேயே எமக்கு வீதிக்கு இறங்கி அதனை நினைவுபடுத்த வேண்டி ஏற்பட்டது. அந்தவகையில் எமது நுகேகொடைக் கூட்டம் வெற்றியளித்தது.

மக்களுக்காக எமது அரசியல் நடவடிக்கை தொடரும். அச்சுறுத்தல் மூலம் எவரும் எமது பயணத்தைத் தடுக்க முடியாது.

மக்களின் குறை கேட்கும் தலைவராக நாமல் ராஜபக்ஷவே தற்போது விளங்குகின்றார்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசிடம் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.” – என்றார்.



# கல்விக்கு 1.3 சதவீதமே ஒதுக்கீடு; இந்தத் தொகை போதுமானது அல்ல

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவிப்பு

"கல்விக்காக 6 சதவீதத்தை ஒதுக்குவதற்கு கடந்த காலங்களில் போராடினோம். ஆனால் தற்போது கல்விக்கு 1.3 சதவீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகை போதுமானது அல்ல."

– இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலை வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 வரவு செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1090 ஆக காணப்பட வேண்டிய கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கையில் 761 ஆக காணப்பட்டது. அதன்படி 327 வெற்றிடங்கள் கடந்த காலங்கலில் நிலவின . அவற்றில் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் பல்வேறு அழுத்தங்களுடன் 170 வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களாக 6 புதிய பீடங்கள் இயங்கின. ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே அவை இயங்கின. இந்நிலையில் இப்போது 170 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் எஞ்சிய தொகையையும் நிரப்ப வேண்டும் என்று நாங்கள் கோருகின்றோம். அவசர விடயமாக இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் – அதிபர் சேவையின் சம்பள மறுசீரமைப்பு விடயத்தில் பெரும் முறைப்பாடுகள் காணப்படுகின்றன. தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சியில் இருந்த போது சுபோதினி குழுவுக்கு ஆதரவாகவே பேசியுள்ளீர்கள். ஆனால் நீங்கள் வந்த பின்னர் திருத்தங்களைமேற்கொண்டுள்ளீர்கள். இதுபோதுமானது அல்ல. கல்வி என்பது நாட்டில் அடிப்படையானது.

முன்னுரிமை வழங்க வேண்டிய பிரிவுகளில் கல்வி சுகாதாரம் என்பன உள்ளன. இவற்றுக்கு முன்னுரிமை வழங்காவிட்டால் நாடு தோல்விகண்டதாகவே இருக்கும். இதனால் இந்த அரசாங்கம் இந்த சம்பள பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

கல்விக்காக 6 சதவீதத்தை ஒதுக்குவதற்காக நாங்களும் உங்களுடன் போராடினோம். ஆனால் இப்போது 1.3 சதவீதத்தையே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகை போதுமானது அல்ல. இந்த விடயத்தில் நீங்கள் நல்ல தீர்மானங்களை எடுக்கும் போது நிபந்தனைகளின்றி அரசாங்கத்துக்கு உதவுவோம்.

இதேவேளை கல்வி மறுசீரமைப்பில் பாடசாலை நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முஸ்லிம் பாடசாலைகள் திங்கள் முதல் வியாழக்கிழமை வரையில் பிற்பகல் 2.50 வரையில் நீடிக்கப்படவுள்ளது.

மாணவர்கள் பகல் உணவு தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வர். பொருளாதார சிக்கலில் பல குடும்பங்கள் இருக்கின்றன. இவ்வாறான நிலைமையில் நேர நீடிப்பை நீடித்தால் அவர்களுக்கு உணவு வசதிகளை ஏற்படுத்த வேண்டும்.

இதேவேளை கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். தீவு பகுதியொன்றை எடுத்துக்கொண்டால் போக்குவரத்து பிரச்சினை தொடர்பில் பார்க்க வேண்டும்.

வைத்தியசாலை, தபால் நிலையம் மற்றும் வங்கி இருப்பதால் அது கஸ்டப் பிரதேச பாடசாலை அல்ல என்று கூற முடியாது. இதனால் அங்கு 16 பாடசாலைகள் கஷ்டப் பிரதேச அந்தஸ்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இது எந்த வகையில் நியாயமானது என்று கேட்கின்றேன்.

இதேவேளை கஷ்டப் பிரதேச பாடசாலைக்கு செல்லும் ஆசிரியர்களுக்கு அதற்காக 1500 ரூபா கொடுப்பனவே வழங்கப்படுகின்றது. இன்றைய பொருளாதாரத்தில் இது போதுமானதா? போக்குவரத்து மிகவும் மோசமானது. அவர்கள் அங்கேயே தங்க வேண்டியிருக்கும்.

மேலதிக செலவுகள் இருக்கும். அவர்களின் செலவுகளை எண்ணிப்பாருங்கள். இந்த தொகை இது கஸ்டப் பிரதேச ஆசியர்களுக்கு ஊக்கப்படுத்தாமல் ஊக்கமிழப்பையே செய்கின்றது. இதனால் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நான் சிலரை அவுஸ்திரெலியாவில் இருந்து அழைத்து வந்துள்ளேன். ஆங்கில கல்வி தொடர்பில் அவர்கள் சில பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். இது தொடர்பில் நீங்கள் அவதானம் செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்."– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறீதரன் அரசமைப்புக் கவுன்ஸிலின் பல விடயங்களில் ஆளுந்தரப்புக்கு சற்று ஆதரவாக – அந்தப் பக்கம் சாய்ந்து – செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக உண்டு. ஆனால் சிறீதரனின் இந்த ஆதரவு ஆளும் தரப்புக்கு அடுத்த ஜனவரி வரை மட்டும்தான் தேவைப்படும் என்று தோன்றுகின்றது. அது பற்றிய விவரத்தை இன்று சற்று விரிவாகப் பார்க்கலாம்.

அரசமைப்புக் கவுன்ஸில் பத்து உறுப்பினர்களைக் கொண்டது. சபாநாயகர் (கலாநிதி ஜகத் விக்ரமரத்தன), பிரதமர் (ஹரணி அமரசூரிய), எதிர்க்கட்சித் தலைவர் (சஜித் பிரேமதாஸ), ஜனாதிபதியின் பிரதிநிதி (அமைச்சர் பிமல் ரத்நாநாயக்க), பிரதமரின் பிரதிநிதி (அபூபக்கர் ஆதம்பாவா எம்.பி), எதிர்க்கட்சி தலைவரின் பிரதிநிதி (அஜித் பெரேரா எம்.பி.), பிரதமரினதும் எதிர்க்கட்சி தலைவரினதும் கட்சிகளை சாராத பிற எதிர்க்கட்சி எம்.பிக்களின் பிரதிநிதி (சி.சிறீதரன் எம்.பி.) ஆகிய 7 பேரைத் தவிர 3 சிவில் சமூகப் பிரதிநிதிகளும் இடம்பெறுகின்றனர்.

அந்தவகையில் இப்போது கலாநிதி பிரதாப் இராமனுஜம், கலாநிதி (திருமதி) டில்குஷி அனுலா விஜேசுந்தர, கலாநிதி (திருமதி) டினேஷா சமரரத்தின ஆகியோர் அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம்பெறுகின்றனர்.

நியமனங்கள் தொடர்பாக அரசமைப்புக் கவுன்ஸிலில் முரணிலைக் கருத்து இருந்து, விடயம் வாக்கெடுப்புக்குச் செல்லுமானால் கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை. ஆயினும் வாக்கெடுப்பில் சமநிலை வந்தால், தீர்மானிக்கும் வாக்கை கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகர் அளிக்க முடியும்.

சபாநாயகர் தவிர்ந்த எஞ்சிய ஒன்பது பேரில் எதிர்க்கட்சித் தலைவரும், அவரது பிரதிநிதியும், சிவில் சமூக பிரதிநிதிகள் மூவரும் இப்போதைய நிலையில் பெரும்பாலும் பல விடயங்களில் ஒத்திசைவான போக்கைப் பின்பற்றுகின்றமையால் – ஒன்றுபட்டுச் செயற்படுகின்றமையால் – அரசுக்கு நெருக்கடி நிலை நீடிக்கின்றது.

பிரதமரும், அவரின் பிரதிநிதியும், ஜனாதிபதியின் பிரதிநிதியும், சிறீதரனும் சேர்ந்தாலும் கூட, அந்த ஒன்பது பேரில் ஆக நால்வரே ஆளும் தரப்புப் பக்கத்தில் ஓரணியாகச் செயற்பட முடியும். அந்த நெருக்கடி இருப்பதனால் வேறு வழியின்றி சிறீதரனை தாஜா பண்ணி அரவணைத்துச் செல்ல வேண்டிய இக்கட்டு ஆளும் தரப்புக்கு உண்டு. ஆனால் அது எவ்வளவு காலத்துக்கு என்பதுதான் கேள்வி.

2023 ஜனவரி மாதம் இந்த மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் பதவிக் காலம் மூன்று வருடங்கள். வருகின்ற ஜனவரியோடு அது முடிவடைகின்றது. அதனால் அந்த இடத்துக்கு மூன்று புதிய சிவில் சமூகப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

அரசமைப்பு கவுன்ஸில் இதற்கான விண்ணப்பங்களைக் கோர இருக்கின்றது. பொதுமக்களில் இருந்து – அரசியல் கட்சி சாராதவர்கள் – இதற்கு விண்ணப்பிக்க முடியும். கவுன்ஸிலில் இடம் பெற்றுள்ள மற்றைய ஏழு உறுப்பினர்களும் இந்த மூவரையும் தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். பின்னர் அது நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படும்.

ஏற்கனவே அரசமைப்பு கவுன்ஸிலில் இருக்கும் இன, மத, மொழி மற்றும் மகளிர், இளைஞர் பிரதிநிதித்துவங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டே இந்த மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படுவார்கள் என்பது வழமையான நடைமுறையாகும்.

இப்போதுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரில் ஒருவர் மலையகத்தைச் சேர்ந்தவர். மற்றைய இருவரும் பெண்கள். அதில் ஒருவர் 40 வயதுக்குட்பட்ட இளம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துபவர்.

இப்போது எஞ்சி இருக்கக் கூடிய எழுவரில் ஒருவர் தமிழர் (சிறீதரன் எம்.பி.). மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். அதேசமயம் இருக்கின்ற எழுவரில் ஒருவர் முஸ்லிம் (அபூபக்கர் ஆதம் பாவா எம்.பி.).

இப்போதைய சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரின் பதவிக்காலம் முடிந்தால் எஞ்சியோரில் மலையகத் தமிழர் எவரும் இல்லை. ஆகையினால் மலையகத் தமிழர் ஒருவருக்கு இடம் அளிப்பதற்காக அந்தத் தரப்பில் இருந்து சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர் மீண்டும் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மூவரில் ஒருவர் இளம் வயதினரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் 40 வயதுக்குட்பட்ட ஒருவராகத் தெரிவு செய்யப்படுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது பதவியில் இருக்கும் மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கற்றறிந்தவர்கள். கலாநிதிகள். புதிய தெரிவின் போதும் அந்தத் தகுதி பார்க்கப்படக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தெரிகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர், அவரின் பிரதிநிதி மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவரும் அண்மைக்காலத்தில் பல விடயங்களில் – பல நியமனங்களில் – ஒன்றுபட்டு ஒரே நிலைப்பாட்டில் இருந்தமையால் ஜனாதிபதியும் அரசும் தாம் நினைத்தவர்களை உயர் பதவிகளுக்கு நியமிப்பதில் நெருக்கடிகளை எதிர்கொண்டனர்.

அரசமைப்புக் கவுன்ஸிலில் சிறீதரன் எம்.பி. ஆளுந்தரப்போடு சேர்ந்து செயற்படுகின்றார் என்று பொதுவான குற்றச்சாட்டு இருந்தாலும், அரசமைப்புக் கவுன்ஸிலில் ஆளுந்தரப்பு தனித்து பெரும்பான்மை பெறுவதற்கு அவரது ஆதரவு மட்டும் போதுமானதாக இருக்கவில்லை. அது, அவ்வப்போது கவுன்ஸிலில் ஆளுந்தரப்பு தனது இலக்குகளை அடைய உதவியது அவ்வளவு மட்டுமே.

அதன் காரணமாக ஆளுந்தரப்பு இதுவரை காலமும் சிறீதரனையும் கையில் போட்டுக் கொள்வதற்காக பல விடயங்களில் விட்டுப் பிடித்ததாகக் கூறப்படுகின்றது.

புதிய சிவில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் கவுன்ஸிலின் நடவடிக்கையின் போதும் எஞ்சிய எழுவரில் சபாநாயகர் தவிர்ந்த மூவர் ஆளுந்தரப்பில் உள்ளனர். அச்சமயத்தில் ஆளும் தரப்புக்கு போதிய பெரும்பான்மையைப் பெறுவதற்கு சிறீதரனின் ஆதரவு ஆளுந்தரப்புக்கு தேவைப்படக் கூடும். அதைப் பெற்றுக்கொண்டு தமக்குச் சார்பான புதிய மூன்று சிவில் சமூகப் பிரதிநிதிகளை அரசு தரப்பினால் கவுன்ஸிலுக்குள் கொண்டு வரக்கூடிய சூழல் இருக்கின்றது.

அப்படி நேர்ந்தால் – அதற்குப் பின்னர் சிறீதரன் எம்.பியின் ஆதரவு அரசமைப்பு கவுன்ஸிலில் அரசு தரப்புக்குத் தேவை என்ற நிலைப்பாடு இல்லாமல் போய்விடும்.

அந்த நிலைமை ஏற்படுமானால், அரசமைப்புக் கவுன்ஸில் உறுப்பினர் என்ற காரணத்தால் இப்போது ஆளும் தரப்பில் இருந்து கிட்டும் அரசியல் சாதக சூழ்நிலையைச் சிறீதரன் பறி கொடுக்க நேர்ந்து விடும் என்று தோன்றுகின்றது.

---

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காரணமாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெள்ளப் பேரிடர்கள் ஏற்படச் சாத்தியம் உள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராசா இது தொடர்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:–

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த சில நாட்களாகக் கிடைத்து வருகின்ற கன மழை காரணமாக நிலம் நிரம்பியுள்ளது. அதேவேளை மிகப்பெரும் கன மழை எதிர்வரும் நாள்களிலும் கிடைக்கவுள்ளன.

ஆகவே இலங்கையின் காலநிலை சார் அனர்த்தமொன்றுடன் தொடர்புடைய அனைத்து திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மிகப்பெரும் மழை, அதிவேக காற்று வீசுகை, வெள்ளப்பெருக்கு தொடர்பில் உடனடி முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் மக்கள் அனைவரும் பேரனர்த்தம் ஒன்றுக்கு தம்மை முழுமையாகத் தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக, தாழ்நிலப் பகுதிகள், ஆற்றங்கரைகள் மற்றும் குளங்களின் வான் பாயும் பகுதிகளில் உள்ள மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நாட்டின் அனைத்து மீனவர்களும் இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

வடக்கு, மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாயிகள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை உரமிடல் மற்றும் கிருமிகளை நாசினி தெளித்தல் போன்ற எந்த விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம்.

எதிர்வரும் 27ஆம் மற்றும் 28ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணத்திலும், எதிர்வரும் 29ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்திலும் மிகமிகக் கனமழைக்குச் சாத்தியங்கள் உள்ளன." – என்றுள்ளது.

---

## 'தில்' இருந்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கூட்டு எதிரணிகளின் நுகேகொடைக் கூட்டம் வெற்றியளித்துள்ளது. பொய்கள் மூலம் இனியும் நாட்டை ஆள முடியாது என்பதை இனியாவது ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.

அரசுக்கான மக்கள் ஆதரவு சரிந்துவிட்டது. அவ்வாறு இல்லை, மக்கள் ஆதரவு தமக்கு இப்போது இருக்கின்றது என என்.பி.பி. அரசு கூறுமானால், அதன் உண்மைத் தன்மை என்னவென்பதை அறிய மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்திக் காட்டுமாறு இந்த அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்." – என்றார்.

# ஏழைப் பெற்றோர், மாணவர்களை சுரண்டிப் பிழைக்கும் டியூசன் மாபியா

## கபீர் ஹாசிம் குற்றச்சாட்டு



ஆண்டுக்கு பல பில்லியன் ரூபா வருமானம் பெறும் டியூசன் மாபியா என்ற கைத்தொழில் துறை ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர் மற்றும் மாணவர்களை சுரண்டிப் பிழைக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2026 வரவு – செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பாடசாலை கல்வி முறைமையில் தற்போதைய நிலையில் மாணவர்கள் ஆசிரியர்களை மதிக்காத சூழல் காணப்படுகிறது. பல்கலைக்கழக கட்டமைப்பிலும் இவ்வாறான நிலைமையே காணப்படுகிறது. ஆகவே இதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிடின் மாணவர் சமுதாயம் தவறான வழிக்கே செல்லும்.

இந்த நாட்டில் அரிசி மாபியா, மின்சார மாபியா என்று பல மாபியாக்களும் காணப்படுகின்றன. ஆண்டுக்கு பல பில்லியன் ரூபா வருமானம் பெறும் டியூசன் மாபியா என்ற கைத்தொழில் துறையும் காணப்படுகிறது. ஏழ்மை நிலையில் உள்ள பெற்றோர் மற்றும் மாணவர்களை சுரண்டிப் பிழைக்கும் மாபியாவாகவே இந்த டியூசன் மாபியா காணப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த டியூசன் மாபியாவை இல்லாதொழிப்பதாக குறிப்பிட்டது. ஆனால் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் இந்த டியூசன் மாபியாக்கள் தேசிய மக்கள் சக்திக்கு செலவழித்ததாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே அந்த நன்றி கடனுக்காக அரசாங்கம் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கல்வி மற்றும் உயர்கல்வி துறையில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. புதிய கல்வி மறுசீரமைப்பு நாட்டுக்கு அத்தியாவசியமானது. முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவின் ஆட்சியின் போது தேசிய கல்வி ஆணைக்குழு கல்வி மறுசீரமைப்பு தொடர்பான கொள்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின் பரிந்துரைகளை புதிய கல்வி மறுசீரமைப்பில் உள்ளடக்கியிருக்க வேண்டும்.”– என்றார்.

# லண்டனில் ரில்வினுக்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகள் திட்டமிட்டதாக இருக்கலாம்

## விமல் வீரவன்ஸ சந்தேகம்



“மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கு லண்டனில் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு திட்டமிட்டதாக இருக்கலாம். அல்லது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் புலம் பெயர் இலங்கை தமிழர்களிடமிருந்து நிதியைப் பெற்ற போது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமையால் ஏற்பட்ட அதிருப்தியின் வெளிப்பாடாகக் கூட இருக்கலாம்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு ஆதரவாளர்கள் ஜே.வி.பி.யை எதிர்ப்பதாலேயே லண்டனில் ரில்வின் சில்வாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதாக சிலர் கூறலாம். ஆனால் உண்மையில் அங்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு கொள்கை ரீதியிலானதல்ல.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நிதியைப் பெற்றுக் கொண்ட போது வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கூட இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம்.

தொல்பொருள் ஸ்தானங்களில் பெயர் பலகைகள் அகற்றப்பட்டதையும் மாவீரர் நினைவு தினத்தை தாம் விரும்பியவாறு அனுஷ்டிப்பதற்கு சுதந்திரமாக இடமளித்தை மறைப்பதற்காகவும் புலம்பெயர் இலங்கை தமிழர்கள் எமக்கும் எதிரானவர்கள் என்று காண்பிப்பதற்காகக் கூட இந்த ஆர்ப்பாட்டம் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருக்கலாம்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இலச்சினையும் இலட்சியமும்

தம்மினத்துக்காகத் தங்களையே தற்கொடையாகத் தந்த நமது புனிதர்களை நாம் போற்றும் நாள் நாளை. அவர்களைப் பூஜிப்பதற்காக தமிழர் தேசம் தனது ஆன்மக் கதவுகளை அகலத் திறந்து கொள்ளும் புனித வேளை இதுதான்.

இதுவரை காலமும் நம் மண்ணின் மைந்தர்களை - புனிதர்களை - தியாகிகளை - மாவீரர்களை - நாம் நினைந்து, நமக்குள் இணைந்து பூஜித்து வணங்குவதற்குத் தடை விதித்து வந்த பௌத்த - சிங்களப் பேரினவாத அரசின் போக்கில் கடந்த ஆண்டில் ஆட்சி மாற்றத்துடன் ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

தென்னிலங்கையில் தேர்தலோடு ஏற்பட்ட ஆட்சி அதிகார மாற்றம், தமிழர் தேசத்தின் நினைவேந்தல் தொடர்பான அணுகுமுறையிலும் மாற்றத்தை - திருப்பத்தை - ஏற்படுத்தி இருக்கின்றது.

“வடக்காக இருந்தாலும், கிழக்காக இருந்தாலும், தெற்காக இருந்தாலும், மலையகமாக இருந்தாலும் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூருவதற்குரிய உரிமை உள்ளது. இதற்கு நாம் எந்த விதத்திலும் இடையூறு ஏற்படுத்தவில்லை. நினைவேந்தல் நிகழ்வை எவரும் தடுத்து நிறுத்த முடியாது.” - என்று கடந்த ஆண்டிலேயே புதிய அரசின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்திருந்தார்.

“தடை செய்யப்பட்ட இயக்கத்தில் இருந்த தமது பிள்ளைகளை, உறவுகளை அவர்களின் சொந்தங்கள் நினைவு கூரும்போது அவர்கள் பயங்கரவாதிகளை நினைவுகூருகின்றனர் எனக் காட்ட முற்படவும் கூடாது.” - என்றும் அவர் அப்போது சுட்டிக்காட்டியிருந்தார்.

“எனினும், விடுதலைப்புலிகள் இயகம் தடைசெய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்பின் இலச்சினை, படங்களைப் பயன்படுத்தி மாவீரர் தின நிகழ்வை நடத்த இடமளிக்க முடியாது.” - என்றும் அவர் கூறியிருந்தார்.

அவர் இருக்கும் பதவிக்கும் பொறுப்புக்கும் அவரது கூற்றுத் தவறானது என்று கூறி விட முடியாது.

ஆயினும், இப்போது இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு அமைய மாவீரர் நாளை தமிழ் மக்கள் நினைவு கூருவதற்கு ஒரு வாய்ப்பு - அங்கீகாரம் - அனுமதி - கிட்டி இருக்கின்றது.

விடுதலைப்புலிகளின் இலச்சினை, படங்கள் இல்லாவிட்டாலும் கூட, அந்த நாளில் மாவீரர்களைப் பகிரங்கமாக தடை ஏதும் இன்றி நினைவு கூருவதே அவர்களுக்குச் செய்யும் மரியாதைதான்.

இப்படி தடை இன்றி எங்கள் புனிதர்களை நாம் போற்றுவதற்கு - வணங்குவதற்கு - கிடைத்த வாய்ப்பைக் குழப்பாமல், வருடாந்தம் இதனைத் தடையின்றித் தொடர்வதற்குரிய சூழலைப் பேணுவது குறித்து இந்த நிகழ்வுகளை அனுஷ்டிக்கும் போது நாம் அவதானத்தோடு கவனிப்பது முக்கியம்.

இலச்சினையும் படங்களும் சீருடைகளும் முக்கியமல்ல. அவர்கள் போதித்த - அவர்கள் வரித்துக் கொண்ட - முன் மாதிரியாக நடந்து காட்டிய - இலட்சியம்தான் முக்கியம். அதனை மனமார இருத்தி, நிலைநிறுத்திக் கொள்ள இந்தப் புனிதர்களின் நினைவு நாளை பக்குவமாகப் பயன்படுத்திக் கொள்வோம்.



# யாழில் மழை, காற்றால் 171 குடும்பங்கள் பாதிப்பு

நிலவும் மழையுடன் கூடிய காற்று காரணமாக 171 குடும்பங்களைச் சேர்ந்த 560 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 21பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 4 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மின்னல் தாக்கம் மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் கடும் காற்று காரணமாக மூன்று குடும்பங்களை சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் காரணமாக 29 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 123 குடும்பங்களைச் சேர்ந்த 385 பேர் வெள்ளம் மற்றும் மின்னல் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.” என அவர் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை நேரம் நீடிக்கப்படும் பட்சத்தில் போக்குவரத்து வசதி வழங்க நடவடிக்கை

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு



பாடசாலை நேரம் நீடிக்கப்படும் பட்சத்தில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், பாடசாலை நேரம் நீடிக்கப்படுவதற்கான காரணம் குறித்தும் பிரதமர் இதன்போது விளக்கமளித்தார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுடன் ஒத்துப்போகும் வகையில் பாடசாலை நேரம் நீடிக்கப்படுகின்றது.

இதன் மூலம், மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கும் ஆசிரியர்கள் அவர்களை மதிப்பீடு செய்வதற்கும் சிறந்த சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.




# நாடாளுமன்றப் பெண் ஊழியர் ஒருவர் மீதான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு நிராகரிப்பு

## விசாரணை அறிக்கை வெளியானது

நாடாளுமன்ற தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பெண் ஊழியர் ஒருவருக்கு பாலியல் துன்புறுத்தல் நடந்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் நாடாளுமன்றத்தால் உத்தரவிடப்பட்ட வெளி விசாரணையில் துன்புறுத்தல் எதுவும் நிகழவில்லை எனத் தெரியவந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி சுஜாதா அழகப்பெருமவால் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை, நேற்று முன்தினம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவிடம் கையளிக்கப்பட்டது.

ஊழியர் ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியதாக 2025 ஜனவரி 7 ஆம் திகதி நாடாளுமன்ற அறையில் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் முன்வைத்த குற்றச்சாட்டைத் தொடர்ந்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தினால் உள்ளக விசாரணை நடத்தப்பட்டது.

எனினும், முறைப்பாடு அளித்தவர் அதன் விசாரணை முடிவுகளில் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

இதன் விளைவாக, நாடாளுமன்ற ஊழியர் ஆலோசனைக் குழு ஜூலை 25 அன்று, சுதந்திரமான வெளி விசாரணையை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானித்தது.

அதன்படி, சுஜாதா அழகப்பெரும தொடர்புடைய அனைத்துத் தரப்பினரையும் அழைத்து, கிடைக்கும் ஆதாரங்களை ஆராய்ந்து, சம்பவம் தொடர்பான தகவல்களை ஆய்வு செய்த பின்னரே இறுதி அறிக்கையைத் தயாரித்து வழங்கினார்.

சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட முடிவுகளின்படி, பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டை ஆதரிக்க எந்த வித ஆதாரங்களும் இல்லை என்று விசாரணையில் கண்டறியப்பட்டதுடன், முறைப்பாடு அளித்தவருக்கு எவ்வித பாலியல் துன்புறுத்தலும் நடைபெறவில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், அதே பிரிவில் பணிபுரியும் வேறு எந்தப் பெண் அதிகாரியையும் உள்ளடக்கிய பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சீரற்ற காலநிலை காரணமாக மண்சரிவு அபாயம் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறும் மக்கள்



மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பாதிக்கப்பட்ட கொழும்பு – ஹல்துமுல்ல பிரதான வீதியின் போக்குவரத்து தொடர்ந்தும் ஒரு வழிப் போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலையை தொடர்ந்து இந்தப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மண்சரிவு ஏற்பட்டதை அடுத்தே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், தொடரும் அதிக மழை காரணமாக பலாங்கொடை – பெட்டிகல பிரதேசத்தில் மண் சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளதால் அங்கு வசிக்கும் 30 பேர் பெட்டிகல பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு காரணமாக மூடப்பட்டுள்ள கொழும்பு–கண்டி பிரதான வீதியின் பஹல கடுகன்னாவ பகுதி எதிர்காலத்தில் திறக்கப்பட்டாலும், போக்குவரத்தை ஒருவழி போக்குவரத்தாக மட்டுமே மட்டுப்படுத்தப்பட வேண்டியிருக்கும் என்று கேகாலை மாவட்ட செயலாளர் தெரிவித்துள்ளார்.






# பருத்தித்துறை சுப்பர்மடத்தில் மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு

மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று பருத்தித்துறை சுப்பர்மடத்தில் இடம்பெற்றுள்ளது.

முனியப்பர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று அப்பகுதியை சேர்ந்த மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் நேற்று காலை 10.00 மணிக்கு அங்கிருந்து மாவீரர் நாள் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டு வரும் சுப்பர்மடம் கடற்றொழிலாளர் சங்க மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு அவர்களின் பெற்றோர், உரித்துடையோரால் ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டு, மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலித்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மாவீரர்களின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் சிறுவர்களின் நடனம், கவிதை, பேச்சு உள்ளிட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாவீரர் பெற்றோர், உரித்துடையோருக்கு சிற்றுண்டிகள் வழங்கப்பட்டு, வேட்டி, சேலை வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.









# மாகாண சபைக்குப் பதிலாக விரைவில் புதிய முறைமை?

## இந்தியா செல்லும் ரில்வின் சில்வா கலந்துரையாடுவார் எனத் தகவல்

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்யும் பிறிதொரு முறைமை தொடர்பாக ஆலோசித்து வருகின்றது என்றும், இந்தியாவுக்குச் செல்லவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இது தொடர்பில் அங்கு கலந்துரையாடுவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

மாகாண சபைத் தேர்தல் ஒரு வருடத்துக்குள் நடத்தப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி வழங்கப்பட்டிருந்தாலும், இன்னமும் தேர்தல் நடத்தப்படவில்லை.

கடந்த வாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எந்த வாக்குறுதியையும் வழங்கவில்லை.

இந்தநிலையில், மாகாண சபை முறைமையைப் பதிலீடு செய்யும் பிறிதொரு முறைமை தொடர்பாக அரசு ஆலோசித்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இனிவரும் காலங்களில் மாகாண சபைகள் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பாகப் பேசுவதில் அர்த்தமில்லை என்றும், அதைப் பதிலீடு செய்யக்கூடிய மாற்றுவழிகள் தொடர்பாக சிந்திப்பது அவசியம் என்றும் அரசின் நெருக்கமான கொழும்பு வட்டாரங்களில் இருந்து கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தபடி எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் புதிய அரசமைப்பு உருவாக்கப் பணிகளில் மாகாண சபை முறைமையை பதலீடு செய்யும் முறைமை தொடர்பாக ஆராயப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.




# யாழ். பல்கலைக்குப் புதிதாக பேரவை உறுப்பினர் நியமனம்

**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பேரவைக்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளரான குமாரசாமி சத்தியகுமார் என்பவரே உடனடியாகச் செயற்படும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்களில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு வராத உறுப்பினர் ஒருவரின் வெற்றிடமான இடத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு - 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் நியமனத்துக்காக மூன்று பேரைத் தெரிவு செய்து, ஜனாதிபதிக்குப் பரிந்துரைப்பதற்கான தெரிவுக் கூட்டம் எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், பேரவையில் வெற்றிடமாக இருந்த இடத்தை நிரப்புவதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இந்த நியமனத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





# அயோத்தி ராமர் கோயில் கட்டுமானப் பணி நிறைவு: கோபுரத்தில் காவிக் கொடி ஏற்றினார் பிரதமர் மோடி



அயோத்தி ராமர் கோயில் கட்டுமானப் பணி நிறைவடைந்ததையடுத்து, 161 அடி உயர கோபுர உச்சியில் பிரதமர் மோடி நேற்று காவிக் கொடி ஏற்றியுள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் ஸ்ரீராம ஜென்மபூமி அறக்கட்டளை சார்பில் பிரம்மாண்ட ராமர் கோயில் கட்டும் பணி 2020 ஓகஸ்டில் தொடங்கியது. இதன் ஒரு பகுதியாக 2024 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி குழந்தை ராமர் சிலை பிராண பிரதிஷ்டை விழா நடைபெற்றது.

இதையடுத்து பொதுமக்களின் வழிபாட்டுக்கு கோயில் திறக்கப்பட்டது. எனினும், கட்டுமானப் பணி தொடர்ந்து நடைபெற்று வந்தது. இந்நிலையில், முழு கட்டுமானப் பணியும் கடந்த ஒக்டோபர் 30ஆம் திகதி நிறைவடைந்தது. இதையடுத்து, பிரதான கோயில் கோபுர உச்சியில் கொடியேற்றும் விழா நேற்று நடை பெற்றது.

இவ்விழாவில் பங்கேற்க பிரதமர் மோடி நேற்று அயோத்திக்கு வந்தார். கோயில் வளாகத்தில் லட்சுமணருக்காக கட்டப்பட்டுள்ள சேஷாவதார் கோயிலில் பிரதமர் மோடி வழிபாடு செய்தார். இதைத் தொடர்ந்து, குழந்தை ராமரை வழிபட்டார். இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடியும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத்தும் இணைந்து பிரதான கோயிலின் கோபுர உச்சியில் காவிக் கொடியை ஏற்றினர்.

161 அடி உயரம் கொண்ட கோபுரத்தில் ஏற்றப்பட்டுள்ள அந்தக் கொடி 10 அடி உயரமும், 20 அடி நீளமும் கொண்டது. அந்தக் கொடியில், ராமர் பிறந்த சூரிய குலத்தை குறிக்கும் வகையில் சூரிய சின்னம், மையத்தில் ஓம் மற்றும் மந்தாரை மரம் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் உத்தர பிரதேச ஆளுநர் ஆனந்திபென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

“அயோத்தி நகரம் தனது வரலாற்றில் இன்னொருமுக்கியத்துவம்வாய்ந்தநிகழ்வைக் கண்டு வருகிறது. ராமர் கோயிலில் கொடியேற்றி இருப்பதன் மூலம் பல ஆண்டு கனவு நனவாகி உள்ளது. இதற்காக பாடுபட்ட அனைவருக்கும் தலைவணங்குகிறேன்.

அயோத்தி மீண்டும் உலகத்துக்கு உதாரணமாக விளங்கும் நகரமாக இப்போது உருவெடுத்து வருகிறது. த்ரேதா யுகத்தின் அயோத்தி மனிதகுலத்துக்கு தர்மத்தின் பரிசை வழங்கியது. 21ஆம் நூற்றாண்டில் அயோத்தி மனித குலத்துக்கு புதிய வளர்ச்சி மாதிரியை வழங்குகிறது. அப்போது, அயோத்தி நற்பண்பின் மையமாக இருந்தது. இப்போது, அயோத்தி ஒரு வளர்ந்த இந்தியாவின் முதுகெலும்பாக உருவெடுத்து வருகிறது.

இன்று, முழு இந்தியாவும் உலகமும் ராமர் மயமாக உள்ளது. பல நூற்றாண்டுகளாக நீடித்த வேதனை இன்று ஓய்வு பெறுகிறது. நூற்றாண்டு கால தீர்மானம் இன்று நிறைவேறுகிறது. 500 ஆண்டுகளாக நீண்ட அந்த புனித யக்ஞத்தின் தீபம் இன்று நிறைவுபெறுகிறது.

வருங்கால அயோத்தி புராணமும் புதுமையும் சங்கமிக்கும் இடமாக இருக்கும். சரயு நதியின் அமுததோட்டமும், வளர்ச்சி என்ற தூய நீரோடையும் ஒன்றாக சேரும் நகரமாக அது மாறும்.

இந்த காவிக் கொடி சாதாரணமானது அல்ல. போராட்டம், பக்தி, இந்திய நாகரிக மறுமலர்ச்சியின் சின்னமாக விளங்குகிறது. இதன் காவி நிறம், அதில் பொறிக்கப்பட்டுள்ள சூரிய (ரகு) வம்சத்தின் பெருமை, வரையப்பட்ட ஓம் என்ற எழுத்து, பொறிக்கப்பட்டுள்ள மந்தாரை (கோவிதாரா) மரத்தின் சின்னம் இவையெல்லாம் ராம ராஜ்யத்தின் மகிமையை குறிக்கும்.” என்று அவர் தெரிவித்தார்.

# கடலோர மாவட்டங்களில் 5 நாள்கள் கனமழை; சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு



அந்தமான் அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவான நிலையில், இன்று இலங்கை அருகேயும் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளதால், கடலோர மாவட்டங்களில் 5 நாள்களுக்கு கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

“மலாக்கா ஜலசந்திப் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளது

இது நிகோபார் தீவுகளில் இருந்து தென்கிழக்கே 870 கிலோ மீற்றர் தொலைவில் நிலைகொண்டுள்ளது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 48 மணி நேரத்தில் மேலும் வலுப்பெறக்கூடும்.

குமரிக்கடல் மற்றும் அதையொட்டிய தென்மேற்கு வங்கக் கடல் – இலங்கை பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி, தெற்கு இலங்கை மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நிலவுகிறது. இது வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும்.

இதன் காரணமாக இன்றும் தென் தமிழகத்தில் சில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## விமானத் தாக்குதல் எதிரொலி:

# பாகிஸ்தான் - ஆப்கான் இடையே மீண்டும் போர் பதற்றம் அதிகரிப்பு

பாகிஸ்தான் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஆப்கானைச் சேர்ந்த சிறுவர்கள் உட்பட 10 பேர் கொல்லப்பட்ட நிலையில், உரிய நேரத்தில் பதிலடி கொடுப்போம் என ஆப்கானிஸ்தான் எச்சரித்துள்ளது.

பாகிஸ்தானுக்கும்,ஆப்கானிஸ்தானுக்கும் இடையே எல்லையில் இருந்து இயங்கி வரும் டி.டி.பி. எனப்படும் தெஹ்ரீக் இ தலிபான் என்ற பயங்கரவாத குழுவால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இக்குழு ஆப்கனில் இருந்து கொண்டு பாகிஸ்தானில் சமீபகாலமாக பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில் பக்டிகா, கோஸ்ட், குனார் மாகாணங்களில் பாகிஸ்தான் விமானப்படை மூலம் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். இதனால், இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் வெளியிட்ட அறிக்கையில்,

“பாகிஸ்தான் நடத்திய தாக்குதல் என்பது ஆப்கானிஸ்தான் இறையாண்மை மீதான நேரடி தாக்குதல். சர்வதேச விதிகளை பாகிஸ்தான் மீறியுள்ளது தெளிவாக காட்டுகிறது. இதனால், பாகிஸ்தான் எதையும் சாதிக்கவில்லை. இதற்கு ஆப்கானிஸ்தான் கடும் கண்டனம் தெரிவிக்கிறது. இதற்கு உரிய நேரத்தில் பதிலடி கொடுக்கப்படும்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.















# அமைதிப் பேச்சுக்கு மத்தியில் ரஷ்யா - உக்ரைன் தாக்குதல்கள்

உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக அமெரிக்க அதிகாரிகள் அபுதாபியில் ரஷ்ய பிரதிநிதிகளை சந்திக்க உள்ளனர் என அமெரிக்கா உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், ரஷ்யாவும் உக்ரைனும் திங்கள் கிழமை இரவு முழுவதும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கியேவ் நகரத்தின் மீதான ரஷ்ய தாக்குதல்களில் குறைந்தது 6 பேர் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதே நேரத்தில், ரோஸ்டோவ் பகுதியில் உக்ரேன் நடத்திய தாக்குதலில் குறைந்தது 3 பேர் கொல்லப்பட்டனர் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.


சர்ச்சைக்குரிய 28 அம்ச அமெரிக்க அமைதித் திட்டத்தில் முன்மொழியப்பட்ட மாற்றங்களை உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி வரவேற்றதைத் தொடர்ந்து அண்மைய தாக்குதல்கள் வந்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை அமெரிக்க மற்றும் உக்ரைன் அதிகாரிகள் ஜெனீவாவில் சந்தித்து வரைவுத் திட்டத்தைப் பற்றி விவாதித்தனர்,

இது கியேவ் மற்றும் ஐரோப்பாவின் தலைவர்களால் ரஷ்யாவிற்கு மிகவும் சாதகமானது என்று விமர்சிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

















# பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு

பருத்தித்துறை நகரில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

பருத்தித்துறை நகரின் மத்தியில் விசேட பந்தல் அமைக்கப்பட்டு சிவப்பு, மஞ்சள் துணிகள் கட்டப்பட்டு மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

இரண்டு மாவீரர்களின் தாயார் பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார். தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்று பருத்தித்துறை நகரசபை தவிசா ளர் வி.டக்ளஸ் போல் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபை தரப்பின் ஏற்பாட்டில் நகர் பகுதி மக்கள் இணைந்து முன்னெடுத்துள்ள இந்நிகழ்வில் பருத் தித்துறை நகரசபை உறுப்பினர்கள், ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கேற்று அஞ்சலி செலுத் தியிருந்தனர்.













# யாழ்ப்பாணம், வவுனியா நகரங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல்

















இலங்கையில் 10 முக்கிய நகரங்களை அபிவிருத்தி செய்யும் விசேட திட்டத்தின்கீழ் உள்வாங்கப்பட்டுள்ள வவுனியா மற்றும் யாழ்ப்பாண நகரங்களில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரச திணைக்களங்கள் ஆகியனவற்றின் முழுமையான இணக்கப்பாட்டுடனேயே இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என இதன்போது குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்துக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைவு, வவுனியா மாவட்டத்தின் தொடர்புடைய தரப்பினர்களின் பங்கேற்புடன் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டது. அந்த ஆலோசனைகளின் அடிப்படையில், வவுனியா நகரில் முன்னெடுக்கப்பட வேண்டிய 4 முக்கிய விடயங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன. அதற்கான ஒப்புதல் ஆளுநரால் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிதி ஒதுக்கீட்டுக்கு அமைவாக, உடனடியாக முன்னெடுக்கக்கூடிய திட்டங்கள் எவை என்பது குறித்தும் அடையாளம் காணப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாண வர்த்தகத் தொகுதி அபிவிருத்தி தொடர்பில் தனியான கோரிக்கையொன்றை அமைச்சுக்கு முன்வைக்குமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபையின் மேயர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்ட செயலர், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்), உள்ளூராட்சி ஆணையாளர், காணி ஆணையாளர், யாழ். மற்றும் வவுனியா மாநகர சபைகளின் ஆணையாளர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# பிரதான ஆறுகளின் நீர்மட்டம் உயர்ந்தது

## நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

பிரதான ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னறிவிப்புகளை விட அதிகளவில் திடீரென பலத்த மழை பெய்யுமாயின் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக திணைக்களத்தின் நீர் விஞ்ஞான மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் எல்.எஸ். சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமை மற்றும் குறித்த பகுதிகளிலுள்ள ஆறுகளின் தன்மையின் அடிப்படையிலான கடந்த கால அனுபவங்களுக்கு அமைய எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வெள்ளப்பெருக்கு அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, அனைத்து ஆறுகளுக்கும் அருகிலுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களும் அப்பகுதிகள் வழியாக பயணிப்பவர்களும் நீர்ப்பாசன திணைக்களத்தினால் வெளியிடப்படும் வெள்ள அபாய முன்னெச்சரிக்கை அறிவிப்புகள் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தெற்கு அந்தமான் கடலுக்கு அருகில்உருவாகிவரும்குறைந்தகாற்றழுத்த தாழ்வு மண்டலம் எதிர்வரும் நாட்களில் வலுவடையும் சாத்தியம் காணப்படுவதாக எதிர்வுகூறப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் தாக்கத்தின் காரணமாக நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்கு, தென், ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் 200 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமென உலகளாவிய வானிலை ஆய்வுகளை தொடர்ந்து வளிமண்டலவியல் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



# யாழில் 17 வயது மாணவர்கள் இருவர் போதை மாத்திரைகளுடன் சிக்கினர்!

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்தில் கொழும்பைச் சேர்ந்த 17 வயது மாணவன் ஒருவரும், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றின் 17 வயது மாணவன் ஒருவரும் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள், யாழ்ப்பாணம் சிறுவர் பெண்கள் பொலிஸ் பிரிவில் ஒப்படைக்கப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை அச்சுவேலியில் உள்ள சீர்திருத்தப் பள்ளியில் 14 நாள்கள் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த 17 வயது மாணவனிடம் ஆயிரத்து 500 போதை மாத்திரைகளும், யாழ்ப்பாணம் – ஊரெழுவைச் சேர்ந்த மாணவனிடம் 200 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் யாழ். பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



# சம்பூரில் மாவீரர்களுக்கு சிறீதரன் எம்.பி. அஞ்சலி!

## மாவீரர் தின ஏற்பாடுகளையும் அவர் பார்வையிட்டார்



திருகோணமலை, சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் மாவீரர்களுக்கு நேற்று அஞ்சலி செலுத்தினார். அத்துடன் அங்கு நாளை நடைபெறவுள்ள மாவீரர் தின ஏற்பாடுகளையும் அவர் பார்வையிட்டார்.











# வடக்கில் காணி மோசடி, போதைப்பொருளுக்கு முடிவு கட்ட கூடுதல் அக்கறையுடன் பொலிஸார் செயற்பட வேண்டும்!

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் ஆளுநர் வலியுறுத்து

வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் காணி மோசடிகள், சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் போதைப் பொருள் பாவனை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் கூடுதல் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும், மாகாணத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் புத்திக சிறிவர்தனவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே ஆளுநர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

“யாழ். மாவட்டத்தில் ‘வெளிப்படுத்தல் உறுதி’ மூலமாகப் போலி ஆவணங்களைத் தயாரித்து, காணி மோசடிகள் இடம்பெறுவது அதிகரித்து வருகின்றன. இதனைத் தடுப்பதற்குப் பொலிஸார் எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர வேண்டும்.” – என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்பாடின்றி இடம்பெற்று வருவதாகவும், சில பகுதிகளுக்குப் பொலிஸாரால் கூடச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், அப்பகுதிகளில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட அதிரடிப் படையினரின் உதவியைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

வாள்வெட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும், அது தொடர்பில் தொடர் கண்காணிப்பு அவசியம் என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், ”வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்துக்காக இங்கு சில வன்முறைச் சம்பவங்கள் நடத்தப்படுகின்றன. இது தொடர்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோருவதற்கான ஆவணங்களைப் பெறுவதற்காகவும் சிலர் திட்டமிட்டு இத்தகைய வன்முறைச் சம்பவங்களை அரங்கேற்றுகின்றனர்.” – என்ற தகவலையும் வெளியிட்டார்.

பாடசாலைச் சூழலில் மாணவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்த விசேட நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர் கோரிக்கை விடுத்தார். அதனை உடனடியாகச் செயற்படுத்துவதாக அவர் உறுதியளித்தார்.

அதேவேளை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பொதுமக்களிடம் பணம் மோசடி செய்வது தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைப்பதாகச் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டினார். விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டாலும், மக்கள் மீண்டும் மீண்டும் முகவர்களிடம் ஏமாறுவது கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக வடக்கு மாகாணம் பாதிப்புகளை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளதால், இடர் முகாமைத்துவப் பிரிவினருடன் இணைந்து இடர்தணிப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் விடயத்தில் மாகாண நிர்வாகத்துக்குத் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதன்போது உறுதியளித்தார்.



# பெண்களை அவதூறாக வர்ணிக்கும் அமைச்சர்களை கட்சியில் இருந்து உடனே நீக்க நடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதியிடம் சாமர சம்பத் எம்.பி. கோரிக்கை



பெண்களை வர்ணிக்கும் அமைச்சர்களை உடனடியாகக் கட்சியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் வலியுறுத்துமாறு புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2026 வரவு – செலவுத் திட்டத்தின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

“பெண்களை அழகானவர்கள் உள்ளிட்ட சொற்களைக் கொண்டு வர்ணிக்கும் அமைச்சர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு கல்வியை முறையாக முன்னெடுக்க முடியும்? எனவே பெண்களை வர்ணிக்கும் அமைச்சர்களை உடனடியாகக் கட்சியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி அநுரகுமாரவிடம் அரசின் எம்.பிக்கள் வலியுறுத்த வேண்டும். எமது கட்சியில் இவ்வாறு யாரேனும் நடந்து கொண்டால், அவர்களை உடனே பதவியில் இருந்து நீக்குவோம் .

தற்போது மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதை விடுத்து எம்.பிக்கள், அமைச்சர்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் நடப்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருப்பதால், ஆங்கிலத்தில் பேச முடியாதவர்கள் ஒதுங்கி இருப்பது நல்லது. இல்லையேல், ஆங்கிலத்தை கற்றுக்கொண்டு வந்து உரையாற்ற வேண்டும் .

இது குறித்து, ஜனாதிபதியும் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.



# துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்: ‘மஹதுரு இசுரு’ மாட்டினார்!

அம்பலாங்கொடை நகர சபைக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலாங்கொடை நகர சபைக்கு அருகில் நவம்பர் 4 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் காரில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் அங்கிருந்த நபர் ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்தவர் பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் மீட்டியாகொடை பிரதேசத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “மஹதுரு இசுரு” என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ஐஸ் போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.11.2025




இன்று உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் நிறைந்து காணப்படும். இதனால் உங்கள் இலக்குகளை எளிதில் அடையலாம். இன்று முக்கியமான முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் பணியின் செயல்திறனில் உங்கள் திறமையை நிரூபிக்க சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்துகொள்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி பொங்கும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கு சாதகமான நாள். பணப்புழக்கம் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று சில மாற்றங்கள் காணப்படும். அதற்கு தக்கவாறு நீங்கள் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பேசும்போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் அனைத்து விதத்திலும் உங்களுக்கு நற்பயன் அளிக்கும்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி கிடைக்கும். என்றாலும் நற்பயன் கிடைக்க நீங்கள் திட்டமிட்டு செயல்பட வேண்டும். உங்களின் புதுமையான கருத்துக்கள் மூலம் உங்கள் படைப்புத்திறன் பிரகாசிக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைத் தக்க வைத்துக்கொள்ள நீங்கள் சமநிலையோடு நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.




நீங்கள் இன்று எதிர்படும் சவால்களை விவேகத்துடனும் உறுதியுடனும் கையாள வேண்டும். உற்சாகமான நேர்மறையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்காது. பனிச் சுமை காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியில் சிறந்த பலனைக் காண உங்கள் பணிகளை ஒழுங்காகத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் லேசான விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நகைச்சுவையான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணப்பற்றாக்குறை காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக உங்கள் தேவைகளை சந்திக்க போதிய பணம் கையில் இருக்காது.

ஒவ்வாமை காரணமாக சளி / இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மிகவும் பரபரப்பாகக் காணப்படுவீர்கள். இன்று உங்களின் எளிமையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் உங்களுக்குச் சாதகமான பலன்கள் கிடைக்கும். உறுதி மற்றும் தைரியம் மூலம் உயர்வான வெற்றியை அடைவீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணியின் மீதான உங்கள் அர்ப்பணிப்பு நன்மை பெற்றுத் தரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்களின் இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்கள் சேமிப்பு கணிசமாக அதிகரிக்கும். இன்று அதிக பணம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்களிடம் காணப்படும் நேர்மறையான ஆற்றல் காரணமாக நீங்கள் ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்கள் எதிர்காலம் பற்றிய அதிக சிந்தனையுடன் காணப்படுவீர்கள். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி எடுப்பீர்கள். உணர்ச்சிவசப்படாதீர்கள். அது உங்களுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தித் தரும்.

இன்று பணிகள் அதிகமாகக் காணப்படும். சக பணியாளர்களுடனான உறவைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடனான பிரச்சினை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாடான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

இன்று போதிய அளவு பண வரவு இருக்காது. ஏற்றத் தாழ்வு காரணமாக நிதியில் ஸ்திரத்தன்மை சாத்தியம் இல்லை.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்படலாம்.




இன்று சில பதட்டமான சூழ்நிலை காணப்படும். அதிலேயே அதிக நேரம் கழியும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரலாம்.

பணிகளின் இயல்பு கடினமாக இருப்பதன் காரணமாய் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கம் ஏற்பட இத்தகைய போக்கைத் தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் பராமரிப்பிற்காக பணம் செலவு செய்யவேண்டியிருக்கும். தேவையற்ற வகையில் பணம் இழக்கும் வாய்ப்பு உள்ளது.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. இன்று அவநம்பிக்கையும் பதட்டமும் காணப்படும். இசை கேட்பது அல்லது புத்தகம் படிப்பது போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று பணிச்சுமை அதிகரித்துக் கொண்டே இருக்கும். உங்கள் பணிகளை இன்று எளிதாக முடிக்கும் நிலை காணப்படாது.

உங்கள் மனதில் ஏற்படும் குழப்பமான எண்ணங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். அதனை சமாளிப்பது இயலாத நிலையாக இருக்கும். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.

தலை வலி வர அதிக வாய்ப்பு உள்ளது. தியானம் அல்லது பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று மிகவும் வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்கள் செயல்களை எளிதாகவும் மகிழ்ச்சியாகவும் மேற்கொள்வீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் இலக்குகளை எளிதாக அடைவீர்கள். அனைத்து விதத்திலும் வளர்ச்சி காணப்படும்.

பணியிடத்தில் நீங்கள் சிறப்பாகவும் தன்னிச்சையாகவும் பணியாற்றுவீர்கள்

உங்கள் துணையுடன் உணர்வுகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். வங்கியில் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.11.2025




இன்று பதட்டமான சூழ்நிலை காணப் படும். இசை கேட்பது அல்லது திரைப் படம் பார்ப்பது போன்ற நிகழ்சிகள் மூலம் மனதை திசை திருப்பி ஆறுதல் பெறலாம்.

நீங்கள் பொறுமையின்றி செயல்படு வதை விட புத்திசாலித்தனத்தை பயன் படுத்த வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்ள இது அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படும். கையிலிருக்கும் பணத்தைக் கொண்டு சமாளிப்பதை கடினமாக உணர் வீர்கள்.

முதுகில் விறைப்புத் தன்மை மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று விருப்பமான பலன் காண சாதகமான நாள் அல்ல. நீங்கள் உங்கள் முன்னேற்றம் குறித்து கவலைப் படுவீர்கள். எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் பாதையில்வரும் தடைகளை சமாளிப் பது கடினமாக உணர்வீர்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். பணி களை நம்பிக்கையுடன் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க இயலாது. உங்கள் நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் தவறான முறையில் நடந்து கொள்வீர்கள்.

நிதி நிலைமை ஸ்திரத்தன்மை யின்றி காணப்படும். சேமிப்பதற்கும் குறைந்த வாய்ப்பே காணப்படும். உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம் குறித்த கவலை காணப்படும்.




இன்று அனைத்து செயல்களிலும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைப் பது கடினமாக உணர்வீர்கள். நீங்கள் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத் தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதில் தாமதம் காணப்படும்.

சில தவறான புரிந்துணர்வின் காரணமாக உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்படும்.

இன்று குடும்பத்தின் நலனுக்காக தேவையற்ற செலவுகள் காணப்படும். அதிக செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. கால் வலியால் பாதிக்கப்படலாம். இது உங்களுக்கு சற்று கவலையை அளிக்கும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். ஆன்மீக ஈடுபாடு சிறந்த ஆறுதல் தரும். நீங்கள் விரைவில் புனித யாத்திரை மேற்கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

பணியைப் பொறுத்தவரை நல்ல பலனடைவீர்கள். உங்கள் கடின உழைப்பிற்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இணைந்து வீட்டில் நடைபெற விருக்கும் சுப நிகழ்ச்சி குறித்த திட்டங்களைத் தீட்டு வீர்கள். இதனால் உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி கிட்டும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறிது பணம் இழக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் திடமான ஆரோக்கியத்தை பரா மரிப்பீர்கள்.



# ஐஸ் போதைப்பொருளுடன் கிராம அலுவலர் சிக்கினார்!

ஐஸ் போதைப்பொருளுடன் கிராம உத்தியோகத்தர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

மேற்படி கிராம உத்தியோகத்தர் கம் பஹா, மீரிகம பிரதேசத்தில் மீரிகம பொலி ஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள் ளார்.

மீரிகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபரான கிராம உத்தியோகத்தர் மீரிகம – ஹலுகம பகுதி யில் வைத்து கைது செய்யப்பட்டுள் ளார்.

இவர் மீரிகம – நெலிகம பகுதி கிராம உத்தியோகத்தர் ஆவார்.

அவரிடம் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வரும் மீரிகம பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத் துள்ளனர்.